திரு. எஸ். இராமச் சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் இந்தப் பகுதிகளைப் பற்றி நன்றாக அறிவார்கள். எங்கள் பகுதி சாதாரண காலங்களிலே வறண்டிருக்கும். இப்போது குடிப்பதற்கு தண்ணீர் இல்லாமல், சேரும் நீரும் கலந்த நிலையில் இருப்பதால் அதைக் குடிக்கின்றமக்களுக்குக் காலராநோய் வந்துவிட்டது. அந்தப் பகுதியில் பஞ்ச நிவாரண வேலைகளை மேற்கொள்ள வேண்டுமென்று ஊராட்சி ஒன்றியத்திடமும் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் கேட்டுக்கொண்டோம். பாசன வசதியுள்ள ஏரிகளைத்தான் பராமரிக்க முடியும், குடிநீர்க் குளங்களை ஆழப்படுத்த முடியாது எனத் தெரிவித்து விட்டனர். இந்தப் பகுதியில் இருக்கின்ற குளங்களே குடிநீர்க் குளங்கள் தான். இக்குளங்களில் மழை மூலம் தேங்கும் நீரைத் தான் குடிப்பதற்கும் குளிப்பதற்கும் சமைப்பதற்கும் பயன்படுத்துகிறார்கள். பாசனவசதி உடைய குளங்களோ ஏரிகளோ இந்தப் பகுதியில் கிடையாது. ஆகவே பஞ்சநிவாரண வேலைத்திட்டத்தின் கீழ் குடி தண்ணீர்க் குளங்களை ஆழப்படுத்தவும் அகலப்படுத்தவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மேலும், நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்திடம் 500 அடி அல்லது 600 அடி ஆழம் வரை 15 நாட்களில் துளை போடும் சக்தி உள்ள "போர் செட்டுகள்" உள்ளன. அவைகளைப் பயன்படுத்தி இப் பகுதியில் இரண்டு குழாய்க் கிணறுகளைத் தோண்டினால் குடிதண்ணீர் பற்றாக்குறையைச் சமாளிக்க முடியும். இந்தக் கருவிகள் இப்பொழுது ஓய்வாக இருக்கின்றன. அரசாங்கம் வாடகை கட்டினால் குறைந்த செலவில் குழாய்க் கிணறுகள் போட்டுத் தர நெய்வேலி நிறுவனத்தினர் சம்மதித்துள்ளனர். ஆகவே, தமிழக அரசு இந்த உதவியைப் பயன்படுத்தி, இப் பகுதியில் இரண்டு குழாய்க் கிணறுகள் போட்டுத்தர ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கனம் உறுப்பினருடைய யோசனைகளைப் பரிசிலனை செய்து, சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க அரசாங்கம் முன்வரும்.

(இ) நீலகிரியில் போதிய மழையின்மையால் பயிர்கள் பூஷண நோயினால் பாதிக்கப்பட்டதும், கடன் வசூலே ஒற்றிவைத்தலும்.

திரு. ஜெ. பெள்ளி கவுடர் : தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டத்தில் போதிய மழையில்லாததாலும் விவசாயப் பயிர்களுக்குப் பூஷண நோய் விழுந்ததாலும் அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதால் தற்போது வசூல் செய்யும் கடன்களைத் தள்ளிப் போடவேண்டும்" என்ற அவசரப் பொது முக்கியமான காரியத்தை சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Mr. Speaker, Sir, the Collector of the Nilgiris has reported that there was no rain for the past four months in the district. However, the condition of the standing crops such as tea, coffee, potato and paddy is fair. There is also no prevalence of late blight or past attack on crop at present. In the circumstances the situation does not warrant the postponement of collections of loan instalments.

(ஈ) லாரிகள் முதலியவை டீசல் எண்ணெய்க்குப் பதிலாக மண்ணெண்ணெயை உபயோகிப்பதால் அரசுக்கு விற்பனை வரி இழப்பும் மக்கட்கு மண்ணெண்ணெய் தட்டுப்பாடும்.

THIRU N. KASIRAMAN : Mr. Speaker, Sir, under rule 41 of the Assembly Rules, I call the attention of the Hon. the Minister for Food and Agriculture to a matter of urgent public importance, namely the unauthorised and illegal use of kerosene oil instead